செ.வெ.எண்:198 நாள்:21.03.2018

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 20 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.6.89 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.03.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓய்வூதியதாரர்களிடமிருந்து 38 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார். இதில் 36 மனுக்களின் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது. இக்கூட்டத்தில் ஓய்வூதியதாரர்களின் கோரிக்கைகளை பல்வேறு துறை அலுவலர்கள் கனிவுடன் பரிசீலத்து விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார்.

தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ திட்டம் - 1995 ன் கீழ் 10 ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவ நிதி ரூ.1,89,192 மதிப்பிலான காசோலைகளையும், தமிழ்நாடு அரசு ஓய்வூதியார் குடும்ப பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ் 10 நபர்களுக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பிலான காசோலைகளையும் என மொத்தம் 20 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.6.89 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் சென்னை ஓய்வூதிய இயக்கக இணை இயக்குநர் திருமதி.மஞ்சுளா, மாவட்ட கருவூல அலுவலர் திரு.அருணாச்சல சுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு.ஜவகர் சிந்தா மற்றும் அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.